**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 02.07.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **01.07.2021** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ந.க.எண். 2645/2021/அ1 நாள் 1.7.2021 தேதிய கடிதத்தில் நாமக்கல் நகராட்சியில் குடிநீர் பிரிவில் ஓட்டுநராக பணிபுரியும் திரு கி. ஜனார்த்தனம் அவர்கள் வயதான தாயார் மற்றும் குடும்பத்துடன் இராசிபுரம் அருகிலுள்ள ஆர். புதுப்பாளையம் கிராமத்தில் வசித்து வருவதாலும், தனது வயதான தாயாரை உடனிருந்து கவனிக்க வேண்டியுள்ளதாலும், இராசிபுரம் நகராட்சிக்கு பணி மாறுதல் கோரியுள்ளதாக தெரிவித்து மன்ற தீர்மான ஒப்புதலுடன் அனுப்ப கோரப்பட்டுள்ளது. எனவே, இராசிபுரம் நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு மேற்படி பணியாளரை பணி மாறுதலில் ஈர்த்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திரு கி. ஜனார்த்தனம், ஓட்டுநரை நாமக்கல் நகராட்சி ஓட்டுநர் பணியிடத்திலிருந்து இந்நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு ஈர்த்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2694/21/சி1)

**தீர்மானம் எண். 1040**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–2022 முதல் 2023–2024 வரையுள்ள காலங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.02.2021 அன்று நடைபெற்றதில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு குத்தகை உரிமம் வழங்கியதற்கு நகராட்சிக்கு எதிராக திரு எ.பி. அருணாசலம், சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். 8252/2021–ற்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு எம். ஏழுமலை, அரசு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் வழக்குக் கட்டணம் ரூ. 15000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(1818/21/அ2)

**தீர்மானம் எண். 1041**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி TN 28 AS 0104 என்ற வாகனத்திற்கு 7 புதிய டயர் 7.50 x 16, 7 டியூப் மற்றும் 7 பிளாப்கள், புதிய பேட்டரி பொருத்துதல், ரேடியேட்டர் சர்வீஸ் மற்றும் நான்கு ஸ்பிரிங் எக்ஸ்டிரா பட்டை அடிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.15 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2244/21/எச்1)

**தீர்மானம் எண். 1042**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 170 நாள் 27.10.2020–இல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகராட்சியில் BPL கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ளுதல், கணக்கெடுப்பு படிவங்களை அச்சடித்தல், கணக்கெடுப்பு படிவங்களை கள ஆய்வு மேற்கொள்ளுதல். மேற்படி கூடுதல் விவர படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்தல், அதற்குத் தேவையான அதிவேக பைப்பர் பிராட்பேண்ட் இணைப்பு பெறுதல், எழுது பொருட்கள் வாங்குதல் மற்றும் இது தொடர்பான இதர கூடுதல் செலவினங்களுக்கு ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட கூடுதல் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(251/19/எச்1)

**தீர்மானம் எண். 1043**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், நகர பொது மக்களுக்கு கோவிட்–19 நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு, கடந்த 3.06.2021 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பொருட்கள் விவரம் | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் ரூ. | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி ரூ. | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், உறையூர் திருச்சி ரூ. |
|---|---|---|---|---|
| 1 | லைசால் 5 % | 162.02 | 170/– | 177/– |
| 2 | சேனிடைசர் (500 ML) பாட்டில் | 217.12 | 220/– | 224.20 |
| 3 | கை கழுவும் சோப் | 44.84 | 48/– | 53.10 |
| 4 | டிடர்ஜெண்ட் சோப் | 21.24 | 24/– | 25.96 |
| 5 | தெர்மல் ஸ்கேனர் | 2336.40 | 2500/– | 2596.00 |
| 6 | பல்ஸ் ஆக்ஸிமீட்டர் | 1433.60/– | 1480/– | 1736.00 |
| 7 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 12180.00 | 12300/– | 12600.00 |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 (SDRF) நிதியிலிருந்து Section 15 – வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(868/20/எச்1)**

**தீர்மானம் எண். 1044**

அனுமதிக்கப்பட்டது.

( 6 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், நகர பொது மக்களுக்கு காய்ச்சல் உள்ளதா என்று கண்டறியும் பொருட்டு, Surveillance Survey நடத்த கள ஆய்வுப் பதிவேடுகளை தயார் செய்யும் பணிக்கு கடந்த **3.06.2021** அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | கள ஆய்வுப் பதிவேடு ஒரு புக் தயார் செய்ய |
|---|---|---|
| 1) | தமிழன் ஆப்செட் பிரிண்டர்ஸ், எருமப்பட்டி | ரூ. 75/– |
| 2) | அன்பு ஆப்செட் பிரிண்டர்ஸ், நாமக்கல் | ரூ. 80/– |
| 3) | கண்ணன் பிரிண்டர்ஸ், நாமக்கல். | ரூ. 82/– |

வ.எண். **1**–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், தமிழன் ஆப்செட் பிரிண்டர்ஸ், எருமப்பட்டி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 (SDRF) நிதியிலிருந்து Section 15 – வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/868/20)**

**தீர்மானம் எண். 1045**

அனுமதிக்கப்பட்டது.

( 7 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், பொது மக்கள் காய்ச்சல் பற்றிய விவரங்களை சேகரிக்கவும் **165** கள ஆய்வுப் பதிவேடுகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. **15000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 நிதியிலிருந்து (SDRF) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/868/20)**

**தீர்மானம் எண். 1046**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், நகர பொது மக்களுக்கு நோய் பரவாமல் தடுக்கவும், கிருமி

நாசினிகளான லைசால், சேனிடைசர் 500 ml. பாட்டில், நீர்த்த சுண்ணாம்புத்தூள், கை கழுவும் சோப், துணி துவைக்கும் சோப், தெர்மல் ஸ்கேனர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர் ஆகிய பொருட்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.20 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட்–19 SDRF நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/868/20)

**தீர்மானம் எண். 1047**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கோவிட்–19 கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளுக்காக கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட தெருக்களில் பொது மக்கள் தாண்டி செல்லாத வகையில் தடுப்பு வேலிகள் மூங்கில் மற்றும் சவுக்கு கட்டைக் கொண்டு கட்டியும், தகர சீட்டுகளைக் கொண்டு அடைக்கும் பணிக்கு கடந்த 03.6.2021 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின் வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தடுப்பு அமைக்க ஒரு சதுர மீட்டருக்கு கட்டணம் |
|---|---|---|
| 1) | திரு ஆர். பெரியசாமி, த/பெ. ராமன்,<br>மேற்கு காலனி தெரு, இராசிபுரம். | ரூ. 370/– |
| 2) | இ. நைனாமலை, த/பெ. இடும்பன்,<br>6, குமாரசாமி வீதி, இராசிபுரம். | 330/– |
| 3) | R.A. பரமேஸ்வரன், த/பெ. இராமசாமி,<br>11/6, மில் சந்து, இராசிபுரம். | ரூ. 310/– |

வ.எண். 3–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் திரு R.A. பரமேஸ்வரன், த/பெ. இராமசாமி, இராசிபுரம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினங்களை கோவிட் – 19 SDRF நிதியிலிருந்து Section 15–இல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 1048**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) அரசாணை நிதி (Pay cell) துறை எண். 77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்26.02.2021–இல் தமிழ்நாடு திருத்தப்பட்ட ஊதிய விதிகள் 2017–இன்படி நகராட்சியில் பணிபுரிந்து தற்போது அயற்பணியில் சென்றுள்ள சமுதாய அமைப்பாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த ஊதியத்தினை Level – 8 ரூ. 19500–62000 (தர ஊதியம் 2400) என்ற ஊதிய விகிதத்திலிருந்து Level – 10 ரூ. 20600–65500 (தர ஊதியம் 2800) என்ற ஊதிய விகிதத்திற்கு மாற்றியமைக்கப்பட்டு வரப்பெற்றுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) ஊதிய நிர்ணயம் மாற்றியமைத்தது தொடர்பாக வரப்பெற்றுள்ள அரசாணை வெளியிடப்பட்ட நாளான 26.02.2021 முதல் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(2425/21/சி1)

**தீர்மானம் எண். 1049**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ.குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ),
இராசிபுரம் நகராட்சி.